DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 13.05.2025.

| | | |
|---|---|---|
| Case No. | : | STC. No.55/2023 |
| Deposition of Witness for Prosecution | : | PW.4 |
| Name | : | மஞ்சுளா |
| Husband Name | : | ரங்கராஜன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. Chandar Rao, Grade III Bench Clerk, of this court, on 13.05.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரிக்காக 355 BNS Act- பிரிவு படி மனு தாக்கல் செய்யப்பட்டது).**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் குடியிருந்து இல்லதரசியாக உள்ளேன். கடந்த 17.12.2022-ம் தேதியன்று TN 50 5253 என்ற பதிவெண் கொண்ட suzuki nexaa காரில் நானும் எனது மகன் மகாராஜான், அவரது மனைவி கோமதி, எனது பேரன் மகா கணேஷ், எங்களது நண்பரின் மகள் பாரதி ஆகியோர் மன்னார்குடியிலிருந்து ஏற்காட்டிற்கு சுற்றிபார்ப்பதற்காக வந்தோம். அப்போது சேர்வராயன் கோவிலுக்கு செல்லும் வழியில் TN 45 7114 என்ற பதிவெண் கொண்ட வெள்ளை நிற இண்டிகா காரானது வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எங்களது காரின் வலது புறத்தில் இடித்துவிட்டார். எனது மகன் சம்பவத்தின்போது ஓட்டுநர் இருக்கையில் அருகில் அமர்ந்திருந்தார் அவருக்கு மேல் பல் உடைந்துவிட்டது, தலையில் காயம் ஏற்பட்டது, இடுப்பில் அடிப்பட்டுவிட்டது, மற்றவர்களுக்கு முழுங்காலில் காயம் ஏற்பட்டது. ஏற்காட்டிலுள்ள அரசு மருத்துவமனையில் முதலுதவி

சிகிச்சை எடுத்துக்கொண்டு பின்னர் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டோம். யார் இடித்தார்கள் என்பது எனக்கு தற்போது சரியாக நினைவில் இல்லை. நேரில் பார்த்தால் அடையாளம் ஓரளவு காட்டமுடியும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>நீதிமன்ற கேள்வி:</u>** நீங்கள் மன்னார்குடியில் எந்த தேதி, எந்த நேரத்தில் ஏற்காட்டிற்கு கிளம்பினீர்கள் என்றால் 16.12.2022–ம் தேதி கிளம்பி அன்றே ஏற்காட்டிற்கு வந்தோம்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

மன்னார்குடியிலிருந்து ஏற்காட்டிற்கு சுற்றி பார்க்க வந்தது எந்த தேதியில் என்றால் 16.12.2022–ம் தேதி ஆகும். ஏற்காட்டில் எங்கே தங்கி இருந்தீர்கள் என்றால் அதைப்பற்றி தற்போது நினைவில் இல்லை. மன்னார்குடியிலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பி ஏற்காட்டிற்கு எத்தனை மணிக்கு வந்தடைந்தீர்கள் என்றால் தற்போது நினைவில் இல்லை. நீங்கள் தங்கியிருந்த ஹோட்டலிருந்து எத்தனை மணிக்கு கோவிலுக்கு கிளம்பி சென்றீர்கள் என்றால் காலை உணவு முடித்தவுடன் கிளம்பி சென்றோம் நேரம் ஞாபகம் இல்லை. உங்களது காரினை ஓட்டி வந்த ஓட்டுநருக்கு மலைப்பாதையில் ஓட்டுவதற்கான முன் அனுபவம் உள்ளதா என்பதை விசாரித்து தெரிந்துகொண்டீர்களா என்றால் நாங்கள் ஏற்கனவே கேரளா போன்ற இடத்திற்கு அவருடன் சென்றுள்ளோம். உங்கள் வாகனத்திற்கு எதிராக ஒரு வண்டி வந்ததாக சொல்லப்படும் வண்டியின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியும் TN 45 7114 டாடா இண்டிகா ஆகும். எதிரி ஓட்டி வந்த காரின் நிறமானது வெள்ளை நிறம் என்று போலீஸ் விசாரணை சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படகூடிய இடமானது குறுகலான சாலைதான் என்றால் சரியல்ல எதிர் எதிரே கார்கள் சென்று வரக்கூடிய அளவு சாலை இருந்தது. நீங்கள் அந்த சாலையில் செல்லும் போது எதிரே வரக்கூடிய வாகனம் தெரியும் அளவீற்கு இருந்ததா என்றால் இருந்தது. நீங்கள் சென்றதாக சொல்லக்கூடிய சாலை மலைப்பகுதியில் அமைந்துள்ளது என்ற காரணத்தினால் அங்கே வேகமாக காரினை ஓட்ட

முடியாது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் வெகு துாரத்திலிருந்து வந்த காரணத்தினாலும், மற்றும் உங்களது ஓட்டுநர் ஓய்வெடுக்காமல் இடைவிடாது காரினை ஓட்டி வந்த காரணத்தினாலுமே விபத்து ஏற்பட்டது என்றும், எதிரியின் கவனக்குறைவினால் விபத்தானது ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கானது இழப்பீடு பெறபடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R.Elanchezhian,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.